பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: புரட்டாசி 3உ (19—9—67) செவ்வாய் ★ வெளியூர்: புரட்டாசி 4உ (20—9—67) புதன் [இதழ்: 81

ஆழ்கடல் துறைமுகம் அமைவது உறுதி!

'கோரிக்கை நாளி'ல் கூறிய உண்மை வீண்போகவில்லை!

'சாத்தியக்கூறுகள் இருக்கின்றன' என்கிறார் திட்டக் குழு உறுப்பினர்!

"'தூத்துக்குடித் துறைமுகம் ஆழ்கடல் துறைமுகமாக மாற்றப்படல் வேண்டும்' என்ற சிபாரிசினை, இப்போது மத்திய அரசின் கப்பல்—போக்குவரத்துத் துறையும் வன்மையாக வலியுறுத்தும் நிலை பிறந்துவிட்டது" என, இன்றைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழின் சிறப்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

திட்டக் குழு நிபுணர் கே. எல். லூத்ரா, தமிழகப் போக்குவரத்துத் துறைச் செயலாளர் ஆர். திருமலையுடன் சேர்ந்து தயாரித்து அளித்திருக்கும் ஆராய்ச்சி முடிவின்படி, 'தூத்துக்குடித் துறைமுகம் ஆழ்கடல் துறைமுகமாக்கப்படுவதற்கான எல்லா வசதி வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறது' எனக் கருத்தறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போது சென்னையிலிருக்கும் மத்திய கப்பல்—போக்குவரத்துத்துறை அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ், அந்த அறிக்கையுடன் இன்று காலை தமிழக முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்!

"போக்குவரத்துக்கான வாய்ப்புக்கள் இல்லை; ஒரு மீன்பிடித் துறைமுகமாக வேண்டுமானால் மாற்றலாம்" என மத்திய அரசின் நிதி அமைச்சகம் அதிருப்தி தெரிவித்ததும், அதனையொட்டி உண்மை நிலைமைகளை எடுத்துக்கூறி எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் தி.மு.கழகம், 'கோரிக்கை நாள்' நடத்தியதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

அதன் விளைவாகவே, நிலைமைகளை மீண்டும் ஆராய்ந்து வர திட்டக் குழு நிபுணர் ஒருவரை, மத்திய அரசு அனுப்பி வைத்தது!

இப்போது அவர் தயாரித்திருக்கும் அறிக்கை, 'தூத்துக்குடித் துறைமுகம் ஆழ்கடல் துறைமுகமாக அமைவதற்கு எல்விதப் பாதக நிலைமையும் கொண்டிருக்கவில்லை; கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம்' என்றே சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது!

இந்தச் சிபாரிசுக்கு நிதி இலாகா எவ்வித மறுப்பும் தெரிவிக்க முடியாத அளவுக்குக் கப்பல் துறை அமைச்சகம் வாதாடும் என்றும் நம்பப்படுகிறது; ஏனெனில், 'தூத்துக்குடித் திட்டம், அந்த அளவுக்குத் தேவையான ஒன்று—பொருளாதார முறையிலும் இலாபமளிக்கக் கூடிய ஒன்று' என்று நிபுணரின் அறிக்கை சிபாரிசு செய்திருக்கிறது!

கட்சியை வளர்க்க அல்ல சீரணி!

அத்தகைய பஞ்ச நிலையில் இல்லை தி.மு.க.!

திருச்சி சீரணித் துவக்க விழாவில் அண்ணா விளக்கம்

திருச்சி, செப். 19—

"சீரணியைக் காட்டிக் கட்சியை வளர்ப்பதாகச் சிலர் என்மீது பழி சுமத்துகிறார்கள்; சீரணியைப் பயன்படுத்திக் கட்சி வளர்க்கும் அளவுக்கு என் கட்சிக்குப் பஞ்சநிலை வந்துவிடவில்லை"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், திருச்சி மாவட்டச் சீரணியை இன்று துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

அண்ணா அவர்களின் 59 வயதைக் குறிக்கும் வகையில் 59 அதிர்வேட்டுகள் முழங்க சீரணித் துவக்க விழா தொடங்கியது.

திருச்சி மாவட்டச் சீரணியில் மொத்தம் 1,500 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விழாவுக்கு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமை வகித்து சீரணித் தொண்டர்கட்கு உறுதிமொழி ஏற்பை நடத்தி வைத்தார்.

சீரணித் தனி அதிகாரி திரு

(4 ம் பக்கம் பார்க்க)

காலவரையறையின்றி ஆங்கிலம் நீடிக்கும்

சட்டம் இயற்றுகிறது நாகாலந்து

"ஆட்சி மொழியாக ஆங்கிலம் காலவரையறையின்றி நீடிக்கும் வகையில், நாகாலாந்து சட்டமன்றம், மசோதா ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது" என, கோகிமா செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அரசியல் சட்டத்தின் எட்டாவது பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள மொழிகளுடன் ஆங்கிலத்தையும் இணைக்கக் கோரியும் நாகாலாந்து சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

1964 முதலே சட்டமன்ற மொழியாக இருப்பது அங்கு ஆங்கிலம்தான்!

"ஆங்கிலம் அந்நிய மொழி என்ற போதிலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அது இந்தியாவின் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது" என்று, மசோதாவை பிரரேபித்த விவசாய அமைச்சர் குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா பிறந்த நாள்

எத்தியோப்பிய வானொலி வாழ்த்து

"இன்று தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றனர்.

"இன்று தமிழகத்தை வாழ வைக்க வந்த தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் பிறந்த நாள்.

"இந்நாளை, தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

"இந்நாளில் எமது இதயங் கனிந்த வாழ்த்தையும் அண்ணா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரைத் தமிழக மக்களுக்கு அளித்த கடவுளையும் வாழ்த்துகிறோம்."

(15—9—67 அன்று எத்தியோப்பிய வானொலியின் தமிழ் நிகழ்ச்சியில்)

'காமராசர் குற்றச்சாட்டு ஆதாரமற்றது'

தேர்தல் கமிஷன் திட்டவட்டமாக மறுப்பு!

'தவறு நடந்திருக்கிறதென்றால் அப்போதே ஏன் சொல்லவில்லை?' எனக் கேட்கிறது!

1967 போதுத் தேர்தலில், தமிழக வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் கணிசமான மோசடி நடந்திருக்கிறது—என்று, தமது தமிழகச் சுற்றுப்பயணத்தின்போது பொதுக்கூட்ட மொன்றில் காமராசர் பேசியிருப்பது பற்றிப் புதுடில்லியிலுள்ள தேர்தல் கமிஷன் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறது!

காமராசரின் குற்றச்சாட்டு பற்றித் தேர்தல் கமிஷனிடம் விசாரிக்கப்பட்டபோது,

'அது ஆதாரமற்றது'

என்று திட்டவட்டமான மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

"வாக்காளர் பட்டியல் சேகரிக்கப்பட்டவுடன், ஒப்புதலுக்காக அது முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது; அதுபோது, எவ்விதக் குறைபாடுகள் பற்றியும் புகார் செய்துகொண்டிருக்கலாம்; அதனைத் தேர்தல் கமிஷனும்—நியாயமானவையாயிருந்தால்—ஏற்கும்.

"அதேபோல் வாக்கெடுப்பின்போது நடத்தப்படும் ஆள் மாறாட்டம் போன்ற குற்றங்களையும், தொடர்புள்ள தேர்தல் அதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கலாம்!

"அதையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது வந்து காமராசர், தேர்தல் பற்றிப் புகார் எழுப்பியிருப்பது எந்த அடிப்படையில்?" என்றெல்லாம் தேர்தல் கமிஷன் கருத்தறிவித்திருக்கிறது.

நெல்லை நகராட்சி

மீண்டும் இயங்கத் துவங்குகிறது

சென்னை, செப். 18—

முந்திய காங்கிரசு ஆட்சியாளர்களால் கலைக்கப்பட்ட நெல்லை நகராட்சி மன்றம் மீண்டும் செயல்படத் தொடங்குகிறது!

செப். 21-ம் நாள் காலை துவக்க விழா நடைபெறவிருக்கிறது.

பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி துவக்கி வைப்பார்.

நெல்லை நகராட்சியின் தலைவராக திரு. மஜீத் அவர்களே நீடித்து இருப்பார்.

அமைச்சர் மாதவனுக்கு வீரவாள்!

மதுரை, செப். 15—

டில்லியில், மொரார்ஜியின் மூர்க்கத்தனமான இந்தி வெறிப் பேச்சுக்கு முன்னே இந்தியை எதிர்த்து வீரமுழக்கமிட்டுத் திரும்பிய தமிழகச் சட்ட அமைச்சர் திரு. மாதவனுக்கு வீரவாள் பரிசளிக்கப்பட்டது.

தமிழன்பர்கள் சார்பில் அவருக்கு இந்த வெள்ளி வீரவாளை மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அளித்தார்.

விட்டிலென்றால், எதைப் போட்டாலும் சாப்பிடுவார்கள். வெளியே விருந்துகளிலோ, எதற்கும் குறை சொல்லாமல் இருக்க மாட்டார்கள்!

காங்கிரசு ஆண்டபோது மட்டும் கதர், நூற்காமலே தழைத்திருந்ததைப் போலவும், கழக நிர்வாகத்தில் மட்டும் அது 'வாடி'விட்டதுபோலவும் காமராசர் கவலைப்பட்டிருக்கிறார்!

"கதரில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை; நம்பிக்கை இல்லாததை இவர்கள் எப்படி நல்லபடியாகச் செய்யப் போகிறார்கள்?" என்று காமராசர் மதுரையில்பேசினாராம்!

அதற்கு மறுநாள், 'விஜயவாடாச் செய்தி' என்று—'இந்து' பேப்பரில் ஒரு தகவல் வந்திருந்தது.

நாடு முழுவதிலுமே பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள கதர்த் துணிகள் தேங்கிக் கிடக்கின்றனவாம்!

நவம்பர் மாதவாக்கில் 500 டெப்போக்கள் மூடப்படுமாம்!

மொத்தம் உள்ள 50,000 'ஸ்பிண்டில்'களில், 5,000 'ஸ்பிண்டில்'கள்தான் பயன்படுத்தப்படுகின்றனவாம்!

1,300 கிராமியக் கதர்த் தொழில் நிறுவனங்களில், 300-தான் ஒழுங்காக வேலை செய்கின்றனவாம்!

இப்படிப்பட்ட ஆந்திர மாநிலத்தில் தேங்கியிருக்கும் கதர்த் துணியின் மதிப்பு ரூ. 60 இலட்சமாம்! இதில் ரூ. 15 இலட்சத்துக்கான துணிகள் தரம் குறைந்தவை!

எங்காவது காமராசரைக் கண்டால் கேளுங்கள்—'ஆந்திராவில் ஆளுவது கழகமா?' என்று!—நாடு முழுவதுமே ஏன் ஐயா கதருக்கு இப்படிப் பட்ட கதி?' என்று!

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம். பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 3 (19—9—67) செவ்வாய்

அரும்பெரும் சாதனை!

தமிழக ஆட்சிப் பொறுப்பை, நமது கழகம் ஏற்றுக்கொண்டு ஆறு திங்களும், சில நாட்களும்தான் ஆகின்றன. இந்தக் குறுகிய காலத்துக்குள்ளாகவே, கழக ஆட்சி பல சாதனைகளைப் புரிந்திருக்கிறது.

இச்சாதனைகள் அனைத்திலும், 'தலையாய சாதனை' என முதற்கண் குறிப்பிடத்தக்கது, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்படுவதாகும். இந்தப் படி அரிசித் திட்டம் சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் மட்டுமே துவங்கப்பட்டது என்றாலும், சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் இப்பொழுது விரிவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் படி அரிசி ஏற்பாட்டை, அரசியல் விருப்பு வெறுப்புக்குத் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுக்காத நல்லெண்ணம் படைத்திருக்கின்ற அனைவரும் பாராட்டுகின்றனர். 'இத்திட்டத்தை, இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் செயல்படுத்த வேண்டும்' என்ற கருத்தை, 'பொருளியல் நிபுணர்' என ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பவர் வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால், இந்த ஒரு படி அரிசி ஏற்பாட்டை, காங்கிரசுக் கட்சியினரால் பாராட்ட முடியவில்லை; அதே நேரத்தில், இதைக் கண்டிக்கவும் அவர்களுக்குத் துணிவில்லை! இருந்தாலும், ஒரு படி அரிசி ஏற்பாட்டினால் தங்களுக்குள்ள எரிச்சலை வெளிப்படுத்திக் கொள்ளாமலும் இருந்திட அவர்களால் முடியவில்லை.

இதனால், ஒரு படி அரிசித் திட்டத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய நூதனமான முறையை, காங்கிரசுப் பெருந்தலைவர்கள் கையாளத் துணிந்தனர்; அதாவது, 'தமிழகம் முழுவதிலுமுள்ள மக்களிடமிருந்து வசூலிக்கின்ற வரிப் பணத்திலிருந்து இழப்புத் தொகையை ஈடுசெய்து, சென்னை—கோவை ஆகிய இரண்டு நகர மக்களுக்கு மட்டும் ஒரு படி அரிசி கொடுத்துவருவது முறையற்றது' என்ற நூதன வாதத்தை, அவர்கள் கிளப்பிவந்தனர்—கிளப்பியும் வருகின்றனர்!

இத்தகைய பொருளற்ற பிரசாரத்தால், 'தமிழக மக்கள் அதிருப்தியடைந்து கழக ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுவர்' என்று காங்கிரசுத் தலைவர்கள் எதிர்பார்த்தனர்; ஆனால், அவர்கள் பெற்றது ஏமாற்றமேயாகும்.

தங்களுக்குப் பரிந்து பேசுவதுபோல் காங்கிரசுத் தலைவர்கள் ஆடிவரும் அரசியல் கூத்தின் அவலட்சணத்தைத் தமிழக மக்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டனர். கழக ஆட்சிக்கு எதிராக அவர்கள் விரிந்த அரசியல் வலையில் தமிழக மக்கள் விழுந்துவிடவில்லை!

ஒரு படி அரிசித் திட்டத்தைச் சுட்டிக்காட்டி, கழக ஆட்சிக்கு எதிர்ப்பையும், தங்களுக்கு ஆதரவையும் தமிழ் மக்களிடமிருந்து பெற்றுவிட முடியும் என்ற நினைப்பில், இன்றுவரை செய்துவந்த நச்சுப் பிரசாரத்தை, இனிக் காங்கிரசுப் பெருந் தலைவர்களால் செய்யமுடியாது அந்த நச்சுப் பிரசாரத்தைச் செய்துவருவதற்கு அவர்களுக்கு இருந்த வாய்ப்பையும் பறித்துவிட, கழக ஆட்சி தீர்மானித்துவிட்டது!

வருகின்ற தைத் திங்கள் முதல் நாளுக்குள்ளாக, குடும்ப அட்டை செயல்படுத்தப்பட்டு வருகின்ற நகரங்கள் அனைத்துக்கும் ஒரு படி அரிசி ஏற்பாட்டைச் செயலாற்றவுள்ள மகிழ்ச்சிகரமான செய்தியை, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த முறையில், கழக ஆட்சிக்கு எதிராக ஒப்பாரி வைத்துவர காங்கிரசுப் பெருந் தலைவர்களுக்குள்ள வாய்ப்பில் ஒன்றை—அதிலும் குறிப்பிடத்தக்க ஒன்றை, அண்ணா அவர்கள் பறித்துவிட்டிருக்கின்றார்கள்!

இதற்குப் பின்னராவது, ஒரு படி அரிசி ஏற்பாட்டை வரவேற்று, இவ்வேற்பாட்டை செயலாற்றிவருகின்ற தமிழக அரசைப் பாராட்டும் நல்லறிவு, தமிழகக் காங்கிரசுப் பெருந்தலைவர்களுக்கு பிறக்குமா? இக்கேள்விக்கு—அவர்கள் இயல்பை மதிப்பிட்டுக் கூறுவதாக இருந்தால், 'நல்லறிவு பிறக்காது' என்ற பதிலைத்தான் கூற வேண்டும்.

ஒரு படி அரிசி ஏற்பாட்டைக் குறித்துக் காங்கிரசுத் தலைவர்கள் எந்த அளவுக்குக் குறைபட்டுக்கொண்டபோதிலும், அவ்வேற்பாட்டினால் அது செயல்படுத்தப்பட்டுவரும் நகரங்களிலுள்ள ஏழை மக்கள் பயனடைந்தே வருகின்றனர். அவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்பது கற்பனை அல்ல; மேற்படி திட்டத்தால் ஏழை மக்களின் வாழக்கைச் செலவு முன்னிலும் இப்பொழுது குறைந்திருக்கிறது என்ற உண்மையை மறைப்பதற்கில்லை.

காங்கிரசு ஆட்சியில் 'அரிசி இல்லை' என்ற நிலைதானே நீடித்திருந்துவந்தது? இன்று கழக ஆட்சியில், அந்த இல்லாமை நிலையா நீடித்திருக்கிறது?

அரிசிப் பங்கீட்டுக் கடைகளில் 'அரிசி கிடைக்கவில்லை' எனக் கூறுகின்ற துணிவு, இன்று காங்கிரசுப் பெருந்தலைவர்களுக்கும் கிடையாது. உண்மையை மறைத்துக் கூறினாலும், அவர்கள் பேச்சை மக்கள் நம்புவார்களா?

காங்கிரசு ஆட்சியில் உணவுப் பிரச்சினை, தீர்வு காண முடியாத பிரச்சினையாகவே இருந்துவந்திருக்கிறது. ஆனால் கழக ஆட்சியில். உணவுப் பிரச்சினை, 'பிரச்சினை' என்ற நிலையிலிருந்து மாறிவிட்டது; அதாவது அரிசியைக் கொள்முதல் செய்வதிலும், விநியோகம் செய்வதிலும், கழக ஆட்சி முழு வெற்றி கண்டிருக்கிறது!

இப்பொழுது நெல் உற்பத்தியை இரண்டு மடங்காக ஆக்குவதிலும் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. எதிர்பார்க்கின்றபடி உற்பத்தி இரண்டு மடங்காகப் பெருகும் என்பதும் உறுதி.

உணவுத் துறையில், காங்கிரசுப் பெருந்தலைவர்களை வெட்கித் தலைகுனியச் செய்யத்தக்க வெற்றியை, கழக ஆட்சி, இக்குறுகிய காலத்துக்குள்ளாகப் பெற்றிருப்பது அரும்பெரும் சாதனையாகும்.

—கா. க.

சின்ன விஷயம்

இட்லரின் புயல் படையோ?

பக்கத்து வீட்டுப் பிள்ளை அடிக்கடி நம் வீட்டுக்கு வந்து நம் பையனுடன் சண்டைபோட்டுத் தொல்லை விளைவித்தால், 'அந்தப் பக்கத்து வீட்டுப் பையனை இங்கே சேர்க்காதே' என்று நம் பையனிடம் சொல்லுவோம். இது இயல்பு. பக்கத்து வீட்டுக்காரரும் தம் மகனிடம், 'பக்கத்து வீட்டுப் பையனை இங்கே வரவிடாதே' என்று சொல்லக்கூடும். இதுதான் நடப்பது, இல்லையா?

'பக்கத்து வீட்டுப் பையனை இங்கே சேர்க்காதே' என்று நம் பையனிடம் நாம் சொன்னதற்காக, பத்து வீட்டுக்கு அப்பால் இருக்கிறவர் இடித்துக் கொண்டால் என்ன அர்த்தம்?

அப்படித்தான் இருக்கிறது—சிவசேனை வெறி இயக்கத் தலைவர் பால் தாக்கரே, பம்பாய்ப் பொதுக்கூட்டத்தில் பேசியிருப்பது!

இந்தித் திணிப்பை எதிர்ப்பதன் ஒரு கட்டமாகத் தமிழக மாணவர்கள், இந்திப் படங்களைத் திரையிட வேண்டாமென்று தமிழகத் திரைப்படக் கொட்டகை முதலாளிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேற்கொள்ளும் முறை, 'சரியா, தவறு' என்ற வாதம் நமக்கு வேண்டாம்; எப்படியோ இருக்கட்டும்!

ஆனால், அதுபற்றி ஆத்திரப்பட வேண்டியவர்கள் யார்?—இந்திக்காரர்கள்தானே! இந்த முடிவு யாரையாவது பாதிக்குமானால், அது, இந்திக்காரர்களைத்தானே பாதிக்கும்?

தினவெடுத்தவன் சொறிகிறான் என்றால் அர்த்தம் இருக்கும். அதை விடுத்து, மராத்தியரான இவர் எதற்கு ஆத்திரப்பட வேண்டும்?

'சுண்ணாம்பிலே இருக்கிறது சூட்சுமம்' என்கிற மாதிரி, அதிலேதான் எல்லாமே' இருக்கிறது!

கன்னக்கோலை மறைத்துக்கொண்டு கையில் ஜபமாலை உருட்டிக்கொண்டிருக்கும் சிவசேனைப் போக்கிரிகளின் உண்மைப் போக்கைப் புரிந்துகொள்ள இது ஒன்றே போதும்!

இந்தித் திணிப்பைத் தமிழக மக்கள் எதிர்க்கிறார்கள் என்றால், அது, தங்கள் மொழி–இன–கலை–மரபுகளைக் காப்பாற்றிக் கொள்ளத்தான்!

வங்காளிகள் இந்தியை எதிர்க்கிறார்கள் என்றால், தங்கள் தாய்மொழியும், தனித்த கலை மரபும் அழிந்துபடுமே என்பதால்தானே!

இந்தி வந்தால் மராத்தி மொழி மட்டும் மஞ்சள் குங்குமத்தோடா வாழ்ந்துகொண்டிருக்கும்? காடு வேந்தால், சந்தன மரமும்தான் கூடவே வேகும்! மராத்தி மொழிக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

ஆக, இந்தச் சிவசேனைக்காரர்கள் மராத்திக்காரர்களுக்காகப் பாடுபடுகிறவர்கள் என்ற வாதம், பொடிப் பொடியாகி விடுகிறதே!

'உள்ளுக்குள் எதையோ வைத்துக்கொண்டு வெளிவேடம் போடுகிற விஷமிகள் அவர்கள்' என்பதும் வெளிச்சமாகிறது!

மராத்திக்காரர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறதாகச் சொல்லிக்கொண்டே, அவர்கள்,

'உரிமையைப் பறிக்கிற யாரோ சிலருக்'குத் துணைபோகிறார்கள்!

அந்தச் சிலர் யார்? யாருக்காக இதைச் செய்கிறார்கள்?

மராத்தியர்கள் மெச்சிக்கொள்ளுவதற்காக இவர்கள் எச்சில் இலை எடுக்க வரவில்லை—வேறு ஒரு காரியமாகத்தான் கச்சை கட்டியிருக்கிறார்கள்!

பால் தாக்கரேயின் தகப்பனார் இருந்தாரே—கேசவ சீதாராம் தாக்கரே—அவர், தீவிர காங்கிரசுக்காரராம்! காந்தியடிகளுக்கு ரொம்ப வேண்டியவராம்! அவர் மகன் இவர்! இவரும் தந்தை வழியிலேயே தயார் செய்யப்பட்டவராம்—பின் எப்படி இருப்பார்?

இந்தச் சிவசேனைக்காரர்களின் திட்டம் நமக்குச் சூசகமாகத் தெரிகிறது! 'நின்றவரைக்கும் நெடுஞ்சுவர்—விழுந்த அன்றைக்குக் குட்டிச் சுவர்' என்ற நிலைக்கு ஆகிவிட்டது காங்கிரசு! அதை மீண்டும் நிலைக்க வைக்க முடியுமா என்ற ஓர் அற்ப ஆசை காங்கிரசுக்காரர்களுக்கு!

இன்றைய நிலையில், காங்கிரசின் உயிர்நாடி துடித்துக்கொண்டிருப்பது இந்தியில்தான்! அந்த இந்தியைத் தென்னகம் எதிர்க்கிறது—அதிலும், தமிழகம் முனைப்பாய் இருக்கிறது! அந்த உணர்வை முடுக்கிக்கொண்டு, குத்துக்கல் மாதிரி ஆட்சியில் குந்திக்கொண்டிருக்கிறதே தி மு.க.! இருக்காதா பின்னே வயிற்றெரிச்சல்—காங்கிரசுக்கு!

அதன் விளைவுதான் சிவசேனை!—புரிகிறதா?

மறைமுகமாய் தி.மு.க.-வை—தென்னகத்தை—ஏன் — இந்தியை எதிர்ப்பவர்களையெல்லாம் எதிர்ப்பது அவர்கள் திட்டம்!

இன்று தமிழனுக்கு—தென்னகத்தானுக்கு வந்தது, நாளைக்கு வங்காளிக்கு! மொரார்ஜி தான் சொன்னாரே—'மறைமுக வழிதான் நல்ல வழி' என்று தாங்கள் நினைப்பதாக!

'இங்கே இந்திப் படத்தை எதிர்த்தால், பம்பாயில் தமிழ்ப் படத்தை எதிர்க்க மாட்டார்களோ?' என்று நேற்று முன்தினம் காங்கிரசில் போய்ச் சேர்ந்த ஒரு **குடிமகன்** காங்கிரசு நாளேட்டில் கடிதமே எழுதியிருந்தார்!

புரிகிறதா—இன்றையக் காங்கிரசுக்காரர் நெஞ்சிலே இழையோடும் எண்ணப் போக்கு?

'இந்தச் சிவசேனைக்குப் பின்னாலே மத்திய அமைச்சர்கள் சிலரும், காங்கிரசும் சூத்திரதாரிகளாக உள்ளனர்" என்று வந்த செய்தி, பொய்யல்ல! எப்பாடு பட்டாவது இந்தியை நிலைநிறுத்தும் முயற்சிக்குத் துணை செய்வதுதான் 'சிவசேனை'!

அரசாங்கத்தைச் சார்ாமல், கட்சிச் சார்பில் இட்லரின் 'புயல் படை' புரிந்த கொடுமைகளை நினைவுகூருங்கள் — சிவசேனையின் வெறிப் போக்குப் புரியும்!

பல பிரச்சினைகளில் கழகம் சொல்லும் வாதங்களை முதலில் பலர் புரிந்துகொள்வதில்லை! இதுவும் அதுபோல்தான்!

முன்கூட்டி எச்சரிக்கிறோம்—

"மாணிக்கம் விற்ற ஊரில் மானத்தை விட்டு மண் கூடை சுமக்கிறார்கள் சிவசேனைக்கார மராட்டியர்கள்" என்றால், அது காரியமாகத்தான்! புரிந்துகொள்ளுங்கள்!

—பூரணன்

இணைப்பு மொழி பற்றிய தப்பெண்ணம்

சென்னை, செப். 10—

"இணைப்பு மொழிக் கொள்கை தொடர்பாக மக்களிடையே தவறான கருத்து இருந்துவருகிறது. அந்தத் தப்பெண்ணத்தைப் போக்க உதவ வேண்டும்.

"இணைப்பு மொழியாக ஆங்கிலத்தையும், கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பாட மொழியாக வட்டார மொழியையும் கொள்ளும் திட்டம் பற்றி தப்பெண்ணம் காரணமாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் தனிப்பட்ட முறையிலோ அல்லது பெற்றோர், ஆசிரியர் சங்கம் மூலமாகவோ இந்தத் தப்பெண்ணத்தைப் போக்க உதவலாம்."

—அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சோஷலிச சமுதாயத்தில் பிர்லாவின் சாம்ராஜ்யம்!

முதலீடுகளில் பெரும் பங்கு நான்கு தொழிலதிபர்களிடம்!

'1959—1966-ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தொழில் துறை முதலீடுகளுக்கான அனுமதிகளை இந்தியாவின் நான்கு நிறுவனங்களே ஜீரணித்துக்கொண்டிருக்கின்றன; இதில் மூன்று பங்கை பிர்லா நிறுவனங்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன"

என்ற தகவலை, தொழில்—பொருளாதார நிலைமைகள் பற்றிய தனது அறிக்கையின் இரண்டாம் பகுதியில் டாக்டர் ஹசாரி குறிப்பிட்டுள்ளார்.

இவர் வெளியிட்டுள்ள 'பிர்லா சாம்ராஜ்யங்கள்' பற்றிய முதல் அறிக்கை, நாடு முழுமையிலும்--நாடாளுமன்றத்திலும் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியதும், அதன் பயனாக எம். எஸ். தாக்கர் என்பவர் தலைமையில் இந்திய அரசு ஓர் விசாரணைக் குழுவை நியமித்ததும் குறிப்பிடத்தக்கது.

காமராஜ் 'ஸ்டாண்டர்ட் டைம்'!

பூகோள அடிப்படையில் பத்திரிகைக்குப் பத்திரிகை மாறுகிறது!!!

"விவசாயிகளின் நிலையைப் பார்க்க நான் கிராமங்களுக்குப் போகப்போகிறேன். காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரையில் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறேன்."

—'நவசக்தி': (காலைப் பதிப்பு) 11—9—67

"அடுத்த சுற்றுப்பயணத்தில் ஒழுக்க முழுக்கக் கிராமங்களுக்கே செல்லுவேன். 24 மணி நேரமும் கிராமங்களுக்குச் செல்லும் வகையில் எனது சுற்றுப்பயணத்தை வகுத்துக்கொள்வேன்."

—காங்கிரசின் புதிய துண்டு நாளேடு: (மாலைப் பதிப்பு) 11—9—67

மாணவர் கடமை

"நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மட்டுமின்றி, சமூக அமைப்பை மேம்படுத்தவும், அறிவைப் பெருக்கவும், நாம் வகுக்கும் திட்டங்கள் உதவவேண்டும்; அதுவே, திட்டத்தின் கோட்பாடு"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், வேலூரில் கல்லூரித் திட்ட அரங்கின் இறுதிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது:—

"மாணவரிடம் எனக்கு அதிக அளவு நம்பிக்கை உண்டு. அவர்களுக்குச் சிறந்த எதிர் காலம் உள்ளது.

"நாட்டின் பிரச்சினைகளை மாணவர்கள் நன்கு புரிந்துகொண்டு அவற்றுக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்; திட்ட நோக்கங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும்."

மொழித் துறையில் மொரார்ஜிதேசாய் ஒரு தாத்தாவைப்போல்!

அவர் பேசுவதை அலட்சியம் செய்யுங்கள்!

கே. அனுமந்தையா கூறுகிறார்

"தாத்தாக்கள் பேசுவதைக் கவனிக்க வேண்டியதுதான்; ஆனால், நம்மில் எவ்வளவு பேர் தாத்தாக்கள் பேசுவதை அப்படியே தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம்?

"அதுபோல், மொழித் துறையில் அவர் பேசுவதை ஒரு பொருட்டாகவே மதிக்க வேண்டியதில்லை!"

என்று மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சரும் தற்போது மொரார்ஜிக்குப் பதிலாக நிர்வாகச் சீரமைப்புக் குழுவின் தலைவராக இருப்பவருமான கே. அனுமந்தையா, பெங்களூரில் மாணவர்கள் கூட்டமொன்றில் கூறியிருக்கிறார்.

செலவைக் குறையுங்கள்

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகளை வாங்குங்கள்

FERODO
Brake Linings

பஸ், லாரி சொந்தக்காரர்கள் எவரை வேண்டுமானாலும் கேளுங்கள். டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் சிறந்தவை. நீண்ட நாள் உறுதியாக உழைக்கும்.

காரணம்: உறுப்பு உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர்

உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப் பெற்ற உறுப்புகளையே டிவிஎஸ் விநியோகிக்கிறது.

TVS டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம் சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர்

mas-4248

நடக்க இருப்பவை :



அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

20--9--67

செங்கற்பட்டு

கே. வி. கே. சாமி படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு தர்கா திடலில்; தலைவர்: மா. வீராசாமி எம்.சி. ; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., செ. கோ. விசுவநாதம் எம்.எல்.ஏ.. செ. எ. பலராமன், ஏ. ஆர். அன்சர் எம்.சி., வ. பசுபதி எம்.சி., கோ. ஆலாலசுந்தரம், ஆ. விநயகம் எம்.சி. (வானமாமலையின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.)

வலங்கைமான்

தி.மு.க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 6 மணிக்கு வரதராசன் பேட்டை தெருவில்; தலைவர் : சௌ. சாமிநாதன் ; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி , என். சோமசுந்தரம் எம்.எல்.ஏ., என். சாமிநாதன், சி. முருகையன், பி. கே. இ. அப்துல்லா.

சென்னை 71-வது வட்டம்

எஸ் எஸ்.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு பங்காரு நாயக்கன் தெருவில் (பிளாசா பின்புறம்); தலைவர் : மோகன் ; பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம்.எல்.ஏ., நீ. வீராச்சாமி எம்.எல்.ஏ., நாஞ்சில் மணிமாறன், ஏ. எம். அலி.

அந்தியூர்

தி. மு. கழகச் சார்பில் இரவு 7 மணிக்கு தேரடித் திடலில்; பேசுவோர் : எஸ். முத்து எம்.எல்.சி., ஈ. எம். நடராசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.

மேல்மலையனூர்

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் மாலை 6-30 மணிக்கு பத்திரகிரி திடலில்; தலைவர் ; கே. மண்ணு ; பேசுவோர் : அமுதா ராகவன், ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்., கே. பாண்டுரங்கன் பி.ஏ.பி.எல்., பி வி. இலட்சுமணன், எஸ். சகாதேவன், எம். செல்வராசன், எம். ஆர். அரிதாஸ், கே. ஏழுமலை.

கோவை

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் இரவு 7 மணிக்கு முதல் வட்டம் எம்.ஜி.ஆர். திடலில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுவார்.

இரவு 8 மணிக்கு 20-வது வட்டம் இடையர் வீதியில் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி பேசுவார்.

இராசபாளையம்

21-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு தோப்புப்பட்டி பாவடித் திடலில் ; தலைவர்: ஞா. ஆறுமுகம் ; பேசுவோர் : புலவர் அறிவுடைநம்பி, மற்றும் பலர்.

சென்னை 6-வது வட்டம்

அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் இரவு 7-மணிக்கு நாராயணப்ப நாயக்கன் தோட்டம் 8-வது சந்தில் ; தலைவர் : எஸ். சுந்தரம் ; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், க. அறிவழகன் எம்.எல்.சி., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. கே. மாரியப்பன், எஸ். எஸ். மகாலிங்கம், க. கூத்தரசன், சு இளங்கோ, க. கணேசன். (காலை 10 மணிக்கு, ஆயிரம் பேருக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும்).

மோகனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அழகிரி திடலில் ; தலைவர் : இரா. மு. குருசாமி ; பேசுவோர் : ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., வெ. கண்ணன், மு. பழனிவேலன்.

மணவூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : க. பாலன்; பேசுவோர் : எஸ். கே. சம்பந்தம் பி.ஏ.,எம்.பி., சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு பி.ஏ., சா. கணேசன் எம்.சி., க. துரை, டி. எம். திருமலை, ஏ. சொக்கலிங்கம் பி.ஏ., ஏ. பரந்தாமன் பி.எஸ்சி., பி. கோவிந்தசாமி, இரா. தண்டபாணி, வி. கே. முருகேசன்.

திருச்சி

வள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 9-மணிக்கு புகைவண்டி நிலையம் அருகில் ; தலைவர் : பி. கஸ்தூரிரெங்கன் பி.காம். (ஆனர்சு) ; பேசுவோர் : ஏ. துரைராசு எம்.பி., முத்துச்செல்வன் பி.ஏ.,எம்.எல்.ஏ., ஆதிமூலம், பரமசிவம், வி. பெரியண்ணசாமி பி.ஏ.,பி.எல் , வி. கிருட்டினமூர்த்தி கொடியேற்றுவார் , அ. நடராசன் அண்ணா படத்தைத் திறப்பார் ; அன்பில் தருமலிங்கம் பரிசளிப்மார் ; (இரவு 10 மணிக்கு குமாரி விசயாவின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சிவகாசி

நாவலர் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு மா. நடராசன் திடலில் ; தலைவர் : சி. பழனிச்சாமி ; பேசுவோர் : ச. ஆறுமுகம், கே. மாரியப்பன். (கண்ணம்மா — தங்கராசு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

குடியேற்றம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு குளக்கரையில் ; தலைவர் : எல். எம். எஸ். தட்சணாமூர்த்தி ; பேசுவோர் : பெ. சீனிவாசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., எ. க. துரைசாமி, தி. ச. சுப்பிரமணியம் எம்.சி., செ.மா. அரங்கசாமி, பி. செயராமன் எம்.எல்.ஏ., ஏ. வி. துரைசாமி.

அம்பகரத்தூர்

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன் திடலில் ; சோ. பக்கிரிசாமி ; பேசுவோர் : கோ. சி. மணி, எஸ். இராமசாமி பி எஸ்சி., பி.எல்., அப்துல் முகமது, ப. அ. கரீம், இரா.சேகர்.

21--9--67

சென்னை 27-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பெருமாள் கோவில் தோட்டம் 4-வது சந்தில் ; தலைவர் : எம். ஆர். சந்திரன் : பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., வி. முனுசாமி எம்.சி., துரை. கலியரத்தினம் பி.ஏ., ஜீவா. கலைமணி பி.ஏ.

காரைக்குடி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு செஞ்சைத் திடலில் ; தலைவர்: இரா. கோவிந்தராசன் ; பேசுவோர் : நன்னிலம் நடராசன், சோலையா, சித. சிதம்பரம், அ. நடராசன் பி.ஏ.எம்.சி., கே. என். கைலாசம், இரா. மெய்யப்பன்.

திருமழிசை

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு ; தலைவர் : இ. ஓ. பொன்னுவேலு ; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., பி. சின்னசாமி, தி. ரா. மாசிலாமணி.

நன்செய் நிலத்துக்கும் வரி விலக்கு

ஓர் ஏக்கர் நிலமுடையோர் பயனடைவர்

மதுரை, செப். 18—

"ஓர் ஏக்கரும், அதற்குக் குறைவாகவும் நன்செய் நிலம் வைத்துள்ளவர்கட்கு நில வரி விலக்களிக்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது"

என, அமைச்சர் மாதவன் இங்கு அறிவித்தார்.

"ஓர் ஏக்கர்வரை நன்செய் நிலமுடையோர் அனைவரும் சிறு விவசாயிகள். அவர்களுக்கு வரி விலக்களிப்பது பற்றித் திட்டம் உருவாக்குமாறு நிபுணர்களைக் கேட்டிருக்கிறோம். அத்திட்டம் தயாரானதும், அடுத்த ஆண்டு முதல் நில வரி விலக்களிக்கப்படும்" என்று அமைச்சர் கூறினர்.

ஏற்கனவே புன்செய் நிலங்களுக்குத் தமிழக அரசு வரி விலக்களித்திருப்பது நினைவுகூரத்தக்கது.

கட்சியை வளர்க்க....

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பரமசாமி நன்றி கூறினர்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—

"சமுதாயத்தில் பல்வேறு வேலைகள் இருக்கின்றன ; அவற்றையெல்லாம் அதிகாரிகள் மட்டுமேதான் நிறைவேற்றித் தர வேண்டும் என்பதில்லை ; பொது மக்களுக்கும் பொறுப்பு உண்டு. இந்த அடிப்படையில்தான் சீரணி அமைக்கப்பட்டது.

"சென்னையில் உள்ள சீரணியினர், பத்தே நாட்களில் ஒரு பள்ளிக் கட்டிடத்தையே கட்டி எனக்குப் பரிசாக அளித்தார்கள். அதே போன்ற வேலையை இந்த மாவட்டத்திலும் செய்து காட்ட வேண்டும்.

"வறண்ட நிலங்களை வளமாக்க வேண்டும் ; உணவுப் பெருக்கத்துக்கு உறவிசெய்ய வேண்டும் ; பாலைவனம் போன்றுள்ள பகுதிகளைப் பசுஞ்சோலையாக மாற்ற வேண்டும்.

"உங்கள் பகுதியில் ஒரு வேலையைச் செய்துமுடிக்க நீங்களே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். அதற்கான கருவிகளையும் நிபுணர்களையும் அரசு கொடுத்து உதவும். எனவே உழைப்பால் நாட்டை வளப்படுத்தும் முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும்."

அமுதா ராகவன்

சுற்றுப்பயணம்

செப். 20: மேல்மலையனூர் ; 21 : அவலூர் பேட்டை ; 22: வம்புபட்டு ; 23 : சென்னை.

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரையார் மணிவிழா

20-9-67 புதன் மாலை 4-மணிக்கு

சென்னை--மயிலை எட்வர்டு எலியட்ஸ் சாலையில் உள்ள

இராஜேசுவரி திருமண மண்டபத்தில்

தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்

அறிஞர் அண்ணா

பாராட்டுரை வழங்குவோர் :

மாண்புமிகு அமைச்சர்கள்	பேராசிரியர் இலக்குவனர்
இரா. நெடுஞ்செழியன்	என். வி. நடராசன் எம்.எல்.சி.
மு. கருணாநிதி	சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.
கே. ஏ. மதியழகன்	கி. மனோகரன் எம்.பி.
ஏ. கோவிந்தசாமி	எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.
சத்தியவாணிமுத்து	ஏ. கே. வேலன்
செ. மாதவன்	டி. கே. சண்முகம்
சாதிக் பாட்சா	எஸ். எஸ். இராசேந்திரன்
மா. முத்துசாமி	மு. இராசாக்கண்ணனர்
சட்டமன்ற அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனர்	எம். ஆர். பெருமாள்
மேயர் இரா. சம்பந்தம்	என். மகாலிங்கம்
துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி	டாக்டர் எஸ். கே. நாயர்
கி. ஆ. பெ. விசுவநாதம்	டாக்டர் சங்கரராசு
ம. பொ. சிவஞானம்	சி. சிட்டிபாபு எம்.பி.
எஸ். நல்லபெருமாள்	சௌந்திரம் கைலாசம்
	பூங்கோதை இராமச்சந்திரன்

வரவேற்புரை : புலவர் மி. ச. நடேசன்

நன்றியுரை : நிலநாராயணன்

செந்தாரப்பட்டியில் எஸ்.எஸ். ஆர்.

கலை நிகழ்ச்சி

செந்தாரப்பட்டி உயர்நிலைப் பள்ளிக் கட்டட நிதிக்காக 20—9—67 இரவு 8-மணிக்கு, செந்தாரப்பட்டி சரளா திரையரங்கில், ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையிலும் — நடிகமணி டி. வி. நாராயணசாமி முன்னிலையிலும், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் பாடும் 'கண்ணகி வரலாறு' வில்லுப்பாட்டுக் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

திருமணம்

தோழர் பி. தனசேகரன்—தோழியர் கே. சாந்தா ஆகியோரின் திருமணம், 20—9—67 காலை 9-30 மணிக்கு, சைதை அடுத்த வேளச்சேரி—கோகிலம் தெரு, 5-எண்ணுள்ள இல்லத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

விற்பனையாகிறது

சிறந்த படைப்பு! அரிய விருந்து!

'திருவிளக்கு'

அண்ணா மலர்

ஆசிரியர்: க. இராசாராம் B A.,M P.

விலை ரூ. 1.

நிர்வாகி,'திருவிளக்கு', சென்னை6

இவர்தான் காங்கிரசு-- இதுதான் பக்தவத்சலம்!

"இந்தியை எதிர்த்தால், 'நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இல்லை' என்றுதான் அர்த்தம் !

"இந்தி படிப்பதைத் தடுப்பது என்ன நியாயம்? 'இந்தியைப் படிக்க வேண்டாம்' என்று நீங்கள் (தி. மு. க.) கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

"தி.மு.க.-வினர், மொழிப் பிரச்சினையை விளையாட்டாக நினைக்கிறார்கள்? நாக்குப் போல்தான் மொழியும் இமயம் முதல் குமரி வரை நமது நாடு. நமது நாட்டுக்குப் பொது மொழி தேவை என்று அன்றே காந்தி கூறினர். அன்றுமுதல் இந்தியைப் படித்து வருகிறோம். இந்திதான் பொது மொழி என்று அரசியல் சாசனமும் கூறுகிறது."

--எம். பக்தவத்சலம்

(திண்டுக்கல் காங்கிரசுக் கூட்டத்தில்)

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

அண்ணா பிறந்த நாள் விழா

(ஆறும் நாள்)

20--9--67 மாலை 6 மணிக்கு

36-வது வட்டம் பட்டாளம் பாரக்ஸ் ரோடில்

(மணிக்கூண்டு அருகில்)

தலைவர் : மு. மாசிலாமணி

பேசுவோர் :

அமைச்சர் சத்தியவாணிமுத்து	சு. பாலன் எம்.சி.
அமைச்சர் செ. மாதவன்	தி. சு. நல்லதம்பி எம்.சி.
கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி	என். வி. என். சோமு
ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.	எஸ். எம். சின்னசாமி
எஸ். இராகவானந்தம்	ந. சீனிவாசன்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.